பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 21

1 இஸ்லாம் வருவதற்கு முன் அறபுகளின் நிலை 27

2 நபி ﷺ அவர்கள் தூதராக அனுப்பப்படுதல் 31

3 இறைநம்பிக்கையாளர்கள் குறித்து முன்னுள்ள வேதங்கள் 32

4 நபியவர்களும் நபித்தோழர்களும் மேற்கொண்ட ஹிஜ்றா மார்க்கத்திற்கு உதவியது 34

5 நயவஞ்சகத்தின் சூழ்ச்சியும் சமுதாயத்தில் அதன் வெளிப்பாடும் 35

- யூதர்களின் சூழ்ச்சியும் உஸ்மானின் மரணமும் 35
- கவாரிஜ் தோன்றுதல் 36

6 கவாரிஜ்கள் அலீ இப்னு அபீ தாலிப் ؓ அவர்களை கொலை செய்ய சதித்திட்டம் 38

7 முஆவியா ؓ அவர்களின் கிலாஃபத்தும் கவாரிஜ்கள் குறித்த அவரது நிலைப்பாடும் 39

8 ஆட்சியாளர்களிடம் மோதுவதின் பாதிப்புகள் 41

9 ஒன்றுசேர்ந்து வாழும்படி உத்தரவும் அல்லாஹ்வின் கயிற்றை இறுகப் பிடித்துக்கொள்வதும் 43

- ஜமாஅத் தொழுகையும் முஸ்லிம்களின் ஒற்றுமையும் 43
- கருத்துவேறுபாடுகளின்போது அல்லாஹ்வின் பக்கமும் தூதரின் பக்கமும் திரும்புதல் 50

10 வழிகேடர்களின் குழப்பத்திற்குரிய காரணங்கள் 52

11 அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் மாறுசெய்பவர்களின் முடிவு 53

12 இஸ்லாமிய ஆட்சியாளர்களுக்குக் கட்டுப்படுவதும் அவர்களுக்கு நலன் நாடுவதும் 55

13 வழிகெட்ட பிரிவினருக்குச் சிகிச்சை அளிக்கும் முறை 58

14 வழிகேடர்களின் அய்யங்கள் 61

1

இஸ்லாம் வருவதற்கு முன் அறபுகளின் நிலை

✿

முஹம்மது ﷺ அவர்கள் நபியாக அனுப்பப்படும் முன்உலகமே காரிருளில் வீழ்ந்து கிடந்தது. மக்கள் அறிவீனர்களின் அறிவீனத்திலும் குருடர்களின் வழிகேட்டிலும் சிக்குண்டிருந்தார்கள். யூத மதத்திலும் கிறித்துவ மதத்திலும் உருவ வழிபாடு நுழைந்துவிட்டது. வேதங்களில் மாற்றம் நடந்துவிட்டது. சங்கை மிக்க நபிமார்களான மூஸா ﷺ, ஈஸா ﷺ ஆகியோர் கொண்டு வந்த மார்க்கத்தில் இடைச்செருகல்கள் செய்து அதை முன்பின்னாக ஆக்க ஆரம்பித்துவிட்டனர். நபி ﷺ அவர்களுக்கு நபித்துவம் கொடுக்கப்படும் முன்பு இறந்துவிட்டிருந்த சொற்ப நபர்களைத் தவிர வேறு எவருமே யூதர்கள், கிறித்துவர்களில் நேர்வழி பெற்றவர்களாக இருக்கவில்லை.

அறபுலக மக்களும் கீழ்த்தரமானவர்களாகவே இருந்தார்கள். அரசியல்ரீதியாக அவர்கள் பிரிந்து பிரிந்து கிடந்தார்கள். அவர்களை ஒன்றிணைக்கக்கூடிய தலைமை எதுவும் அவர்களுக்கு இல்லை. அவர்களது சட்டங்களை அவர்களது வமிச அடிப்படையிலேயே வகுத்துக்கொண்டார்கள். ஒவ்வொரு வமிசத்திற்கும் தனிப்பட்ட தலைவர் இருப்பார். தனிப்பட்ட அமைப்பு இருக்கும்.

அவர்கள் தமக்கிடையே எதிரும் புதிருமாக இருந்தார்கள். அவர்கள் ஒருவரையொருவர் ஆக்கிரமித்து அடக்குமுறை செய்பவர்களாகவும், தாக்கிக்கொள்பவர்களாகவும் இருந்தார்கள். படையெடுப்பின்போதும், பழிதீர்த்துக்கொள்ளும்போதும், யுத்தத்திலும், சூரையாடும்போதும், திருடும்போதும் அவர்கள் ஒருவரையொருவர் கொலை செய்பவர்களாகவும் மற்றவர்களின் பொருள்களை அபகரிப்பவர்களாகவும் இருந்தார்கள். ஏனெனில், அவர்களுக்கென்று அவர்களை ஒன்றுதிரட்டுகிற ஓர் அமைப்போ, அவர்களுக்கு மத்தியில் இணக்கம் ஏற்படுத்துகிற ஒரு தலைவரோ இருக்கவில்லை.

4

நபியவர்களும் நபித்தோழர்களும் மேற்கொண்ட ஹிஜ்றா மார்க்கத்திற்கு உதவியது

✿

'அந்நிஹாயா' என்ற நூலில் கூறப்பட்டுள்ளது: நபியவர்களும் நபித்தோழர்களும் மதீனாவில் இருந்த தங்களது அன்ஸாரி சகோதரர்களிடம் மதீனாவிற்குப் புலம்பெயர்ந்து சென்றனர். பிறகு முஹாஜிர்களும் அன்ஸார்களும் அடங்கிய ஒரு பெரும் இஸ்லாமிய சாம்ராஜ்யம் உருவாகிவிட்டது. முஸ்லிம்கள் அதிகரித்துவிட்டனர். ஆகவே, அவர்கள் இறைமறுப்பாளர்களை அவர்களது நாடுகளிலேயே அடக்கி வைத்தார்கள்.

இறைத்தூதர் ﷺ அவர்கள் இஸ்லாமியப் படைகளைத் திரட்டிக் கொண்டு இறைமறுப்பாளர்களிடம் சிறியதும் பெரியதுமான பல போர்கள் புரிந்துள்ளார்கள். ஆகவே, அல்லாஹ் இந்த மார்க்கத்தை மேலோங்கச் செய்துவிட்டான். மக்கா வெற்றியோடு யுத்தங்கள் முடிவுக்கு வர, இறைமார்க்கத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாகப் புக ஆரம்பித்துவிட்டனர். பின்பு நபி ﷺ அவர்களும் மரணித்துவிட்டார்கள். நபியவர்களுக்குப் பின் நேர்வழி பெற்ற கலீஃபாக்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தார்கள். அவர்கள் அல்லாஹ்வின்பால் அழைப்புக் கொடுத்தும் போர் புரிந்தும் கிழக்கிலும் மேற்கிலும் இந்த மார்க்கத்தைப் பரப்பினார்கள். உலகிலும் நாலாப்புறங்களிலும் இஸ்லாமிய அழைப்புப்பணி நீண்டு, மக்கள் இறைமார்க்கத்திற்கு அணிஅணியாக வர ஆரம்பித்தார்கள்.

6

கவாரிஜ்கள் அலீ இப்னு அபீ தாலிப் ﵁ அவர்களை கொலை செய்ய சதித்திட்டம்

✿

நஹ்ர்வான் போரில் அலீ ﵁ அவர்கள் கவாரிஜ்களின் கிளர்ச்சியை அடக்கி ஒடுக்கி, அவர்களைக் கொன்று குவித்த பின் கவாரிஜ்கள் அலீ ﵁ அவர்களுக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டி, அவரையும் கொன்றுவிட்டார்கள். ஏனெனில், அவர்தாம் கவாரிஜ்களை நோக்கிப் பெரும் அளவில் தாக்குதல் நடத்தியவர். அவர்கள் தோன்றுவார்கள் என்றும், அல்லாஹ் அவர்களின்மீது முஸ்லிம்களைச் சாட்டுவான் எனவும், அலீ ﵁ அவர்கள் அவர்களைக் கொன்று குவித்து அவர்களது பலங்களை எல்லாம் சிதைத்துவிடுவார்கள் எனவும் நபியவர்கள் கூறியிருந்தார்கள்.

'அவர்களை நீங்கள் எங்குச் சந்தித்தாலும் கொன்றுவிடுங்கள்' என்பதாகவும், 'நான் அவர்களை அடைந்தால் (அவர்கள் வாழும் காலத்தை அடைந்தால்) ஆது கூட்டத்தார் அழிக்கப்பட்டது போன்று அவர்களைத் திட்டமாக நான் அழித்துவிடுவேன்' என்பதாகவும் நபி ﷺ அவர்கள் கூறிய செய்தியை இது உண்மைப்படுத்துவதாக இருந்தது. ஆகவே, கவாரிஜ்களுக்கு எதிராக அலீ ﵁ அவர்கள் போரிட்ட காரணத்தால் அவரைக் கொன்றுவிட்டார்கள். இதன் மூலம் இஸ்லாமை அழித்துவிட்டதாகவும், முஸ்லிம்களைப் பிரித்துவிட்டதாகவும் அவர்கள் கருதிக்கொண்டார்கள். ஆயினும், அவர்கள் தோற்றுப் போய், நஷ்டமடைந்துவிட்டார்கள். அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். இஸ்லாமிய மார்க்கம் காலம் முழுக்க கண்ணியமாகவே இருக்கும்.

8

ஆட்சியாளர்களிடம் மோதுவதின் பாதிப்புகள்

✿

இந்த வழிகெட்ட கூட்டத்தாருடைய செயல்பாடுகளின் விளைவு தான், இவர்கள் தங்களது ஆட்சியாளர்களிடம் மோதலைக் கடைப்பிடிப்பது. அவர்களிடம் முரண்பட்டு நிற்பதோடு அல்லாமல் தங்களது சமூகத்திடமும் வேறுபட்டு நிற்கிறார்கள். மார்க்கத்தைப் பேணுவதில் சரியான வழிமுறையில் இல்லாத, சந்தேகத்திற்குரியவர்களாக உள்ளவர்களுடன் சேர்ந்து, கெட்ட சிந்தனைகளை வாழ்க்கை முறையாக ஏற்றுக்கொள்கிறார்கள். அந்தச் சிந்தனைகளே சத்தியமானவை என்றும், ஜிஹாது[3] என்றும் நன்மையை ஏவி, தீமையைத் தடுக்கிற காரியம் எனவும் எண்ணிக்கொள்வார்கள். ஆனால், உண்மையில் இவர்களது இந்தச் செயல்பாடுகள்தாம் பெரும் பாவங்களாக உள்ளன.

கெட்ட சிந்தனைகளை வெளியேற்றுவதுதான் உண்மையான ஜிஹாதாக இருக்க முடியும். இறைநம்பிக்கையாளர்களின் தலைவர் அலீ இப்னு அபீ தாலிப் ﷺ அவர்களும் மற்ற நபித்தோழர்களும் நபி ﷺ அவர்களின் உத்தரவுப்படி கெட்ட சிந்தனைகளை உள்ளங்களிலிருந்து துடைத்தெறிந்துள்ளனர். ஆகவேதான், நபி ﷺ அவர்கள் அசத்தியவாதிகளோடு போரிடவும் அவர்களைக் கொன்றுவிடவும் ஏவியுள்ளார்கள். 'அவர்களை நீங்கள் எங்கு கண்டாலும் கொன்றுவிடுங்கள்' என்பதாகவும் 'அவர்களை (அவர்கள் வாழும்

---

3 ஜிஹாது (جِهَادٌ): சொல்லாலும் செயலாலும் ஒருவர் தம்மால் இயன்ற எல்லை வரை முயற்சி செய்தல் என்பது இதன் சொல் விளக்கம். இஸ்லாமிய வழக்கில் அல்லாஹ்வின் வார்த்தையான கலிமா வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை என்பதை மேலோங்கச் செய்வதற்காகப் போரிடுவதைக் குறிக்கும். எனினும், சூழ்நிலைக்கேற்றவாறு இது கடமையாகும். தன் மனஇச்சைக்கு எதிராகவும் ஷைத்தானுக்கு எதிராகவும் போரிடுதல் எல்லாக் காலத்திற்குமானதாக இருக்கும்.

10

வழிகேடர்களின் குழப்பத்திற்குரிய காரணங்கள்

✿

அல்லாஹ்வின் உபதேசங்களையும் அவனது தூதரின் உபதேசங்களையும் வழிகேடர்கள் விட்டுவிட்டார்கள். அவர்கள் தனித்து ஒதுங்கிப் போய், தங்களது எதிரிகளிடம் சாய்கிறார்கள். இது பெரும் ஆச்சரியமாயிருக்கிறது. நீ முஸ்லிமாக இருந்து கொண்டே உனது எதிரியிடம் சாய்கிறாய். ஒரு முஸ்லிம் முஸ்லிம்களோடுதான் இருப்பான். அல்லாஹ் தன் வேதத்தில்

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَكُونُوا مَعَ الصَّادِقِينَ

அல்லாஹ்வை நம்பிக்கைகொண்டவர்களே! அல்லாஹ்வுக்குப் பயந்துகொள்ளுங்கள். மேலும், (சொல்லிலும் செயலிலும்) உண்மையாளர்களுடன் இருங்கள் (9:119) என்கிறான்.

உனக்கு எதிராகச் செயல்படுகிற சூழ்ச்சிக்காரனான, ஏமாற்றுக்காரனான உன் எதிரியிடம் நீ சாய்ந்து அவனுக்கு நீ நலவை நாடினால் அது அகப்பார்வையின் கோளாறும் தோல்வியுமாகும்.

முன்பு கண்ட 4:59வது வசனத்தில் அல்லாஹ் தனக்கும் (தனது வேதத்திற்கும்) தனது நபிக்கும் (தனது நபியின் வழிமுறைக்கும்) அதிகாரம் உடையவர்களுக்கும் கட்டுப்படுமாறு சொல்லிவிட்டு 'இது மிகச் சிறந்தது' என்று கூறுகிறான். அதாவது, இதற்கு மாற்றமாக நடப்பதைவிட இது மிகச் சிறந்தது என்று கூறுகிறான். தொடர்ந்து அல்லாஹ் 'மிக அழகிய முடிவாகும்' என்றும் கூறுகிறான். அதாவது, முஸ்லிம்கள் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவதாலும் அவனது தூதருக்கும் முஸ்லிம்களில் அதிகாரம் உடையவர்களுக்கும் கட்டுப்படுவதாலும் அழகிய முடிவாக அது அமையும்.